# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No. 39/2024

dated : 07.10.2025

D.W.1

Name மாரிமுத்து

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தந்தை பெயர் செல்லம் ஆசாரி. என் தந்தை 1991 ல் காலியிடமாக கிரையம் பெற்று அதில் மூன்று வீடுகள் கட்டியுள்ளார் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு பூர்விகம் கடையநல்லூர் என்றால் சரிதான். தாவா சொத்தைத் தவிர வேறு சொத்துக்கள் ஏதும் எங்களுக்கு கிடையாது. தபசில் சொத்தை 4 ம் பிரதிவாதிக்கு 10 லட்சத்திற்கு கிரையம் கொடுத்துள்ளோம். வாசுதேவநல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் அதை பதிவு செய்தோம். வழக்குரைச் சொத்து கடையநல்லூர் சார் பதிவாளர் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியில் உள்ளது. கடையநல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஏன் பதியவில்லை என்றால் எளிதாக பதிய முடியும் என்பதால் அங்கு சென்று பதிவு செய்தோம். அந்த ஆவணத்தை பதியும் முன்பாக மூல ஆவணம் பற்றி கூறப்படவில்லை என்றால் சரியல்ல. மாரிப்பாண்டிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தில் 30.03.2000 ம் தேதியிட்ட பாக கைத்தடி பற்றிய விவரங்களை கூறவில்லை என்றால் சரிதான். மாரிப்பாண்டிக்கு எழுதிக் கொடுத்த கிரைய

ஆவணத்தில் தகப்பனார் செல்லம் ஆசாரி, தாயார் ராமலட்சுமியம்மாள் இறந்த பின்னர் வாரிசு நிலைமையில் எங்களுக்கும் வாதிகளுக்கும் பாத்தியப்பட்டது என காட்டியுள்ளோம் என்றால் சரிதான். என் தகப்பனார் இறக்கும்போது கடன் ஏதும் வைக்கவில்லை என்றால் சரியல்ல. கடன் வைத்துவிட்டுதான் இறந்தார் ஆனால் அதற்கான ஆதராம் ஏதும் இல்லை. வாதிகள் பிராது தபசு சொத்தை பிரித்து தரும்படி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். மின் இணைப்பு, நகராட்சி தீர்வை ஆகியவை தகப்பனார் பெயரிலிருந்து பின்னர் தாயார் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது. பிராது சொத்துக்கள் அனைத்தும் வாதிகளின் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றும் எனவே வாதிகளுக்கு அவர்கள் வழக்குரையில் கோரியுள்ளபடி தலா 1/6 வீதம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. என் தந்தை இறந்த பின்னர் எங்கள் சமுதாய பெரியோர்கள் முன்னிலையில் பேசினோம். அவர்கள் தற்போது உயிருடன் இல்லை. நான் கூறுவதுபோல் சமுதாய பெரியோர்கள் முன்னிலையில் பேசியது பொய் என்றும் அதுபோன்ற பேச்சுவார்த்தை ஏதும் நடைபெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மாரிப்பாண்டிக்கு நாங்கள் செய்து கொடுத்த கிரையம் வாதிகளின் பங்கை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.07 18:17:13 +0530